# தமிழ்க்காப்பிய மரபில் ஆதியாகம காவியம்

*முனைவர் ஜோ. ஜோசப்பின் ஜீலியட்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப்கல்லூரி(தன்னாட்சி), சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6423

**ஆய்வுச் சுருக்கம்**

*சமயங்களை அடிப்படையாகக் கொண்டுதான் காப்பியங்கள் தோன்றியுள்ளன. மீட்பராகிய இயேசுவின் பாடுகளை சித்தரிக்கும் காப்பியம் இயேசு காவியம் ஆகும். திருவிவிலியத்துள் அமைந்த புதிய ஏற்பாட்டிலுள்ள நால்வர் நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது கண்ணதாசனின் இயேசு காவியம் ஆகும். பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் என்ற முதல் நூலை காவியமாக்க விரும்பி திருச்சி தூய வளனார் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் கவிஞர் ச.சாமிமுத்து ஆதியாகம காவியத்தை முழுமையாகப் பாடி உள்ளார். 50 அதிகாரங்கள் கொண்ட உரைநடைப் பகுதியை 33 படலங்களில் 1444 பாடல்களில் காவியமாகப் படைத்தார் கவிஞர் சாமிமுத்து 33 படலங்களில் இறுதிப் படலம் மட்டும் தாவீது அரசருடைய சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு காவியத்தை உருவாக்கியுள்ளார். ஆசிரியப்பாக்களும், விருத்தப்பாக்களும் மரபுக் கவிதையில் இலக்கிய நயம்பட இக்காவியம் அமைந்துள்ளது. இறையியல் வெளிப்பாடுகள் மனித நேயம், மனிதமாண்பு, ஆகியவை வெளிப்பட படைத்த இக்காவியம் தமிழ் மொழிக்கும் கிறித்தவ சமயத்திற்கும் புதிய வரவாகும். பழமையின் வளர்ச்சியே புதுமை என்பதால் பழமையான வசனத்திலிருந்து புதுமையான செய்திகளை வளர்த்துச் செல்லும் கவிதை வடிவில் இக்காவியம் அமைந்தள்ளது.*

## முன்னுரை

முனைவர் ச.சாமிமுத்து படைத்த ஆதியாகம காவியம் குறித்த படைப்பில் விவிலியம் பற்றிய விளக்கமும் பகுப்பும், பகுப்பில் பழைய ஏற்பாட்டில் உள்ள ஆதியாகமப் பகுதிகளும் இடம் பெறுகின்றன. இவ்விலக்கியம் காவியப் பண்புடையதாக இருப்பதால் தமிழ்க் காப்பிய இலக்கணம், அமைப்பு, போக்கு, குறித்து ஆய்ந்து ஆதியாகம காவிய நூலோடு இணைத்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

## விவிலியம் பெயரும் பகுப்பும்

திருத்துவ வேதம் பைபிள் என்று அழைக்கப்படுகின்றது. "பைப்ர" என்ற கோரைப் புல் அன்று தாள் போலப் பயன்பட்டு இயேசுவின் கருத்துரைகள் எழுதப்பட்டன. இதன் பட்டைகள் "பீப்லகை" என்பதால் இடவாக பெயராக பீப்லாசு, பீபிலா என வழங்க பைபிள் என்னும் சொல்லாக்கம் பெற்றது.

இதன் ஒலி பெயர்ப்பாய் தமிழில் விவிலியம் என்ற சொல்லும் வழங்கி வருகின்றது. பைபிளைப் பரிசுத்த வேதாகமம் என்றும் அழைப்பர் "வித்" என்ற அடிச்சொல்லிலிருந்து வேதம் என்னும் சொல் உருவானது. அறிவு அல்லது அறியப்பட்டது எனும் பொருளைக் கொண்டது வேதம். ஆகமம் ஆன்மா, வந்து சேருதல் எனும் பொருளைத் தருவதாகும். வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு (Old Testament) ஐந்து தொகுப்புகளைக் கொண்டது.

1. முதலைந்து நூல்கள்
2. வரலாற்று இலக்கியங்கள்
3. தீர்க்கதரிசிகள்
4. துதிப்பாடல்களும் பிறப்பாடல்களும்
5. மூதறிவு இலக்கியம்

ஆகிய ஐந்தும் பழைய ஏற்பாட்டில் அடங்கும். புதிய ஏற்பாடு (New Testament) நற்செய்தி நூல்கள், கடிதங்கள், பிறநூல்கள் என மூன்று தொகுப்புகளை உள்ளடக்கியதாகும்.

## காப்பியமும் கூறுகளும்

"ஆதி காவியங்கள் யாவும் சமயச் சார்புடையன. சமயம் இன்றேல் காப்பியம் இல்லை."[1] என்பார் ஜான்சாமுவேல். "காவியம் என்பது தன்னிகரற்ற ஒரு தலைவனை அடிப்படையாகக் கொண்டு விழுமிய மொழி நடையில் எழுதப்படும் பிரமாண்டமான ஒரு படைப்பாகும். (epic is a grant poem based on a great hero and return in a good style) எனவே காவியம் நன்னடைத் தாகி (sublime style) விளங்க வேண்டும் என்பது ஒரு காவிய மரபு"[2]

"மீ மானுட நிகழ்ச்சிகளின் (super natural elements) துணை கொண்டு காவியத் தலைவரைத் தன்னிகரற்றவராய்ச் சித்தரித்து காட்டும் காவியப் போக்கு (Classiciam) அனைத்து காப்பியங்களிலும் உண்டு"[3] தமிழில் காப்பிய இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம் ஆகும். வடமொழியிலிருந்து தான் இவ்விலக்கண நியதிகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. "தமிழ் நூல்கள் இலக்கியம், காப்பியம் என இரு வேறு வகையின என்று அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் கூறுகிறார்."[4]

"காப்பியக் கூறுகளின் எண்ணிக்கை சுமார் நாற்பது என்னும் அளவிற்கு செல்லினும் அவற்றை ஒரு சில வகைகளில் உட்படுத்தலாம். நூன் முகம், நுவல் பொருள், தலைவன் இயற்கை வளம் முதலிய வருணனைகள் அக வாழ்வு, புறவாழ்வு, அகஅமைப்பு, புற அமைப்பு, கதைவடிவம், பாவும் யாப்பும், நடையும் ஆகிய இப்பகுதிகளுக்குள் நூன் முகம் நூலுக்குப் புறம்பாக அமைவது. பிற ஒன்பதும் நூலாக அமைவன"[5] என்கிறார் டாக்டர். ச.வே.சுப்பிரமணியன்.

## ஆதியாகமக் காப்பிய அமைப்பும் போக்கும்

திரு விவிலிய ஆதியாகமத்தில் ஐம்பது அதிகார நிகழ்வுகளையும் ஆசிரியப்பா ஆசிரிய விருத்தம் ஆகிய யாப்பு முறையில் மரபுக் கவிதையில் காவியம் ஆக்கியுள்ளார். கவிஞர் சாமிமுத்து. பாயிரம் தொடங்கி ஆறு பாகங்கள் 33 படலங்கள் ஆகிய பகுப்பு முறைகளுடன் 1444 பாடல்களைக் கொண்ட காவியம் ஆதியாகம காவியம் ஆகும். பழைய ஏற்பாட்டின் அடிப்படையான அனுபவம், இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணம், விடுதலை உணர்வுதான் வேரோட்டமான உணர்வு அடிமைகளாக இருந்த தங்களை இறைவன் எவ்வாறு மீட்டார் இப்படித் தங்களை மீட்ட இறைவன் எப்படி தங்களைப் படைத்தார் என்று கூறுவது தான் ஆதியாகமம். இஸ்ராயேல் மக்கள் இறைவனை எப்படி பார்க்கிறார்கள் என்பதை விளக்கும் பகுதி ஆதியாகமத்தில் இடம் பெறுகின்றது. இக்காவியம் தமிழுக்கும், சமயத்திற்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

ஆதியாகமம் ஒரு தொடக்கநூல், பிறப்பு அல்லது தோற்றம் என்று பொருள்படும். கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பு தான் ஆதியாகமம் இதுதான் திருவிவிலியத்தின் முதல் நூல்.

ஆதியாகமம் என்ற தொடக்க நூலில் வம்ச வரலாறு கூறப்படுகிறது. தந்தை, தந்தையர்க்குத் தந்தை எனத் தலைமுறை குடும்பப் பெயர்கள் அடுக்கிக் கூறப்பட்டுள்ளன.

உலகத் தோற்றம் ஐம்புதச் சேர்க்கையால் ஆனது. ஐம்புத படைப்புகளுக்குப் பின் பிறப்பன. ஊர்வன, நடப்பன ஆகிய உயிரிகளைப் படைத்து அவை உயிர்வாழ வேண்டியவற்றிற்குத் தேவையான உணவுகளையும் அளித்தார் ஆண்டவர். அதற்குள் ஆறு நாட்கள் ஓடிவிட்டன. ஏழாம் நாள் இறுதியில் படைத்த தன்னை ஒத்தமனிதனை ஆண், பெண் என இரு பாலராக்கி அவர்கட்கு அறிவுரை கூறுகின்றார். அவர்கள் தான் ஆதாம், ஏவாள் தீண்டத்தகாத கனி ஒன்றைத் தீண்ட வேண்டாம் என்பது தான் அறிவுரை. மனிதனோ விலக்கியதைப் பகிர்ந்துண்ண பாவம் பெருகியது. பாவச் செயலால் ஆதி தாய் தகப்பன் துன்புற்றனர். விலக்கியதை உண்டதால் நிலம் சபிக்கப்பட்டிருக்கும். உழைத்து உண்பாய் எனக் கூறி இறைவன் அவ்விருக்கும் தோலாடை தந்தார்.

ஆதி மனிதன் ஆதாம், ஏவாள் வழி வந்தோர் இஸ்ராயேலரின் மூதாதையர் ஆவர். கி.மு 2000-த்தில் வாழ்ந்த ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு முதலாய் பன்னிரு குலத்தவர்கள் வழியில் யோசேப்பு எகிப்து மன்னரின் ஆலோசகராக இருந்தமை இக்காவியத்தில் விளக்கப் பெறுகின்றது.

## ஆதியாகமக் காப்பியப் பகுப்பு

ஆறுபாகங்களைக் கொண்ட இக்காவியம் 33 படலங்களாக விரிவுப் பெற்றது. முதல் பாகம் ஐந்து படலங்களைக் கொண்டது. உலகப் படைப்பு, மனிதன் படைப்பு மனிதனின் கீழ்ப்படியாமை ஆதாம் ஏவாள் அடைந்த துயரமும் இறைவனின் அரவணைப்பும், ஆதி தூதர் தூய மைக்கேலின் இறை ஊழியமும் முதல் பாகத்தில் இடம் பெறுகின்றன. இரண்டாம் பாகம் மூன்று படலங்களைக் கொண்டது. காயின், ஆபேல் நோவா, ஆபேல் கோபுரம் பற்றிய குறிப்புகள் இப்பாகத்தில் இடம் பெற்றுள்ளன. மூன்றாம் பாகம் ஆறு படலங்களைக் கொண்டது. ஆபிரகாம் கடவுளின் உடன்படிக்கை விருத்த சேதனம், கோமாராவின் அழிவு, ஈசாக்கின் பிறப்பு, சாராளின் மரணம் ஆகியன இப்பாகத்தில் இடம்பெற்றுள்ளன. ஏழு படலங்களைக் கொண்ட நான்காம் பாகத்தில் ஈசாக்கு, ரெபேக்கா திருமணம், இல்லற வாழ்வு, யாக்கோபு பற்றிய விளக்கம் பெத்தேலில் கடவுள் யாக்கோபுக்கு ஆசி வழங்குதல் போன்ற நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. நான்கு படலங்களைக் கொண்ட ஐந்தாம் பாகத்தில் யோசேப்பின் சகோதரர் அவரை விலைப்பேசி எகிப்து நாட்டு வணிகரிடம் இருபது வெள்ளிக் காசுக்கு விற்ற நிலை, பார்வோனின் கனவுகள், யோசேப்பின் விளக்கம், எகிப்து ஆளுநரான யோசேப்பின் செயல்பாடுகள் இடம்பெறுகின்றன. ஆறாம் பாகமான இறுதிப் பகுதியில் எட்டுப் படலங்கள் காணப்படுகின்றன. யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்க எகிப்துக்குச் சென்றமை, அங்கு நிகழ்ந்த நிகழ்வுகள், யாக்கோபு யோசேப்பின் வழி மரபைப் போற்றினமை, யாக்கோபு தமது பன்னிரு குமாரர்களுக்கு உரைத்த இறுதி உரையும், ஆசியும், மரணமும் விளக்கம் பெறுகின்றன. யாக்கோபு கானான் நாட்டில் அடக்கம் செய்யப்பட்ட பின், யோசேப்பு தன் சகோதரர்களோடு எகிப்துக்குத் திரும்பி உடன்பிறப்பை அங்கு வாழச் செய்தது. 110-ம் வயதில் மரணமடைந்தமை ஆகியன விளக்கப் பெற்று ஆண்டவரின் பேரன்பைப் போற்றுதலோடு காவியம் முடிவுறுகின்றது.

## தமிழ்க் காப்பிய இலக்கணம்

தமிழ்க் காப்பிய இலக்கணத்தை வடமொழியைத் தழுவி வரையறை செய்தவர் தண்டி ஆசிரியர் ஆவார். அவர் எழுதிய காவியதர்சம் தமிழில் தண்டியலங்காரமாய் விளங்குகிறது. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற இரு

வகையில் பெருங்காப்பிய இலக்கணம் நிறைவாக அமைந்திருப்பது தண்டியலங்கார நூற்பாவில் காண முடிகின்றது.

**"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை**
**வாழ்த்து வருபொருளிவற்றினொன்**
**நேற்புடைத்தாக்கி மன்வரவியன்று**
**நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாக்கித்**
**தன்னிகரில்லாத் தலைவனையுடைத்தாய்**
**மலைகடனாடு வளநகர் பருவ**
**மிகு சுடர் தோற்ற மெற்றிணையனபுனைந்து**
**நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்**
**பும் பொழினுகர்தல் புனல் விளையாடல்**
**தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்**
**புலவியற் புலத்தல் கலவியற் ளகித்லென்**
**றின்னை டினைந்த நன்னடைத் தாகி**
**மந்திரத் தூது செலவிகல் வென்றி**
**ந்தியிற் றொடர்ந்து சருக்கமிலம்பகம்**
**பரிச்சேத மென்றும் பான்மையின் விளங்கி**
**நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்**
**கற்றோர் புனையும் பெற்றியதென்ற"[6]**

என்பது தண்டியலங்கார நூற்பா.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருட்களையும் காப்பிய கதையில் இடம் பெறச் செய்யும் போது அது பெருங்காப்பியமாகிறது. நான்கில் ஏதேனும் ஒன்று குறையுமானால் சிறுகாப்பியம் எனப் பெயர் பெறும்.

சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் எனும் பிரிவுகளின் கதை நிகழ்ச்சிகள் சொல்லப்பட வேண்டும் என்பது தண்டி ஆசிரியர் கருத்து. சிலப்பதிகாரமோ காண்டம், காதை எனும் பிரிவுள் அடங்கியதாகும். காதை எனும் உட்பிரிவை கவிஞர் சூ.செல்லப்பா இயேசு பாடின பாட்டு என்ற காப்பியத்தில் குறித்துள்ளார். கம்பராமாயணம் காண்டங்களையும், படலங்களையும் பிரிவுகளாகக் கொண்டது. இலம்பகம் என்னும் பிரிவு சீவக சிந்தாமணியில் காணப்படுகிறது. காலந்தோறும் காப்பியக் கட்டமைப்பின் பெரும் பிரிவும், உட்பிரிவும் பெயர் மாற்றம் பெற்று வந்துள்ளன. கவிஞர் சாமிமுத்துவின் ஆதியாகம காவியம் ஐந்து பாகங்களுடன் 33 படலங்களாய் விரிந்துள்ளது. கதை நிகழ்வுகளுக்குப் பெயர் தர வேண்டும் என்பது தான் காப்பிய விதி ஆகின்றது.

**விவிலியம் கூறும் ஆறு நாள் படைப்புகள்**

இரவு, பகல், காலை, மாலை முதல் நாளிலும், நீர்த்திரள் இரண்டாம் நாளிலும், நிலம், கடல் மூன்றாம் நாளிலும், நிலப்பரப்பில் புல், செடி, மரங்கள் மூன்றாம் நாளிலும், ஒளிப்பிழம்பு, விண்மீன் நான்காம் நாளிலும், பறவைக் கூட்டம் ஐந்தாம் நாளிலும், கால்நடையும், ஊர்வனவும் ஆறாம் நாளிலும், தம் சாயலில் மனிதரை அதே ஆறாம் நாளிலும் படைத்தவர் இறைவன் என்று கவிஞர் சாமிமுத்து கூறியுள்ளார்.

பழைய ஏற்பாட்டில் ஆதியாகமத்தில் "தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இருளுக்கு இரவு என்று பேரிட்டார், சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று"[7]

"தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பேரிட்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று"[8]

பூமியானது புல்லையும் தங்கள் தங்கள் ஜாதியின் படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின் படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லது என்று கண்டார்.

சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று"[9]

தேவன் பகல் இரவை ஆளப் பெரிய சுடர்களைப் படைத்தார்.

**"பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார். தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று"[10]**

"தேவன் அவைகளை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக் கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று"[11]

பின்பு தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.

"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது. சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று"[12]

நாள்தோறும் படைத்த புதுமைகளை விவிலியத்தில் உள்ளவாறு காவியத்திலும் கூறி, இறைவனைத் தன்னிகரற்ற தலைவனாகப் படைத்துள்ளார் காவிய ஆசிரியர் சாமிமுத்து.

### கனவு உத்தி

வருவதுரைத்தல் எனும் உத்திக்குக் கனவைக் கருவியாக்குவது. உலக காப்பியங்கள் பலவற்றின் பண்பாக உள்ளது. தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் களவியலில் காதல் வயப்பட்ட மகளிர் கனவில் புலம்புவதாகக் கூறுகிறார். கனவு காண்பதால் தூக்கமின்மை ஏற்படுவதாகும் மெய்ப்பாட்டியலில் குறித்துள்ளார்.

**"காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்"**[13]

**"கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்"**[14]

"சிறு சிறு பாடல்களுக்குப் பொருந்தும் வகையில் கனவுக் காட்சிகள் இடம் பெறுவதைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். தொடர்நிலை செய்யுளில் கனவுக் காட்சி அமைந்திருப்பதைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. கண்ணகி கண்ட தீய கனவைக் கனாத்திறம் உரைத்த காதையிலும் பாண்டிமா தேவி கண்ட தீய கனவை வழக்குரைக் காதையிலும் இளங்கோவடிகள் விரித்துரைத்துள்ளார்."[15] கனவு பற்றிய நம்பிக்கை மக்களிடையே இருப்பதால் கனவுக் காட்சிகளை அமைத்து பின்வருகின்ற செய்திகளை முன்கூட்டியே கவிஞர்கள் படிப்பவர் அறியும்படிச் செய்கின்றனர். பழைய ஏற்பாட்டு முன்னிலைச் செய்திகள் காவியமாக்கப்பட்ட ஆதியாகம காவியத்திலும் பார்வோன் மன்னன் கண்ட இரண்டு கனவுகள் 25-ஆம் படலத்தில் இடம்பெற்றுள்ளன. கனவுகளை நினைத்து மன்னர் கலங்கியதும் அதன் விளக்கத்தை யோசேப்பு மூலம் அறிந்து கொண்டதுமான நிகழ்ச்சிகள் கனவின் மூலம் உணர்த்தப்பெறுகின்றன.

யோசேப்பு சிறையிலிருந்த போது பார்வோன் மன்னன் நாட்டை ஆண்டு வந்தான். நைல் நதியின் கரையில் பார்வோன் நோக்கியதை நிற்பதைபோல் முரண்பட்ட கனவிரண்டு கண்டான். நைல் நதி கரையின் மேல் நின்றிருக்குமாறு ஒரு கனவு கண்டான். கொழுத்த ஏழு பசுக்கள் நதி நீரிலிருந்து வெளியேறி அகன்றெழுந்த கரைக்கு வந்து செழிப்பாக வளர்ந்திருந்த கோரைப்புல்லை விரும்பி மேய்ந்தன. நதி நீரினின்று சுக்காகிப்போனாற் போல் வற்றிப்போன சுகம் இல்லாத ஏழு பசுக்கள் வந்து கொழுத்தெழுந்த பசுக்களைப் பார்த்து விக்காமல் விழுங்கி நிமிர்ந்து நின்ற வியந்த காட்சியினைக் கண்டான் வேந்தன் என்று கவிதை நடையில் கோரைப்புல் மேய்ந்த கொழுத்த பசுக்களைப் பார்த்து மெலிந்த ஏழு பசுக்கள் விழுங்குவது போல் பார்த்து விக்கித் தவித்தக் காட்சியை முதல் கனவாக கூறுகிறார். தூக்கம் கலைந்தது சிறிது நேரம் கழித்து மற்றொரு கனவு வந்துள்ளது. அது அதிகாலை 3-ஆம் சாமத்தில் கண்டதாகும். சூரியன் எழுந்து தோன்றுகிறான். கிழக்குத் திசை காற்றால் வற்றிப்போய் தீர்ந்தது. கதிர்கள் ஏழையும், இளைத்த பதரும், ஏழு கதிர் விழுங்கக் கண்டு ஒருவாறு கண் விழித்தான் மன்னன். கனவுகளை எண்ணி மன்னன் கலங்கினான். எகிப்து மந்திரவாதிகளை அழைத்து விளக்கம் கேட்டான். சரியான பொருளை எவரும் கூறவில்லை. பொருள் கூற யோசேப்பை

அழைக்க முடிவுசெய்தான். சிறையிலிருந்து யோசேப்பு விடுதலை செய்யப் பெற்றான். அரசன் முன் நிற்கப் பெற்றான். அரசன் கனவுப் பற்றி யோசேப்பிடம் விளக்கம் கேட்டான். யோசேப்பு கடவுள் மீது நம்பிக்கை கொண்டார். மன்னன் கனவைச் சொன்னதும் கருத்தாய்க் கேட்டு மனதில் பதித்துக் கொண்டான். யோசேப்பு இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று பார்வோன் கண்ட கனாக்களுக்குப் பொருள் விளக்கம் தந்தார். மெலிந்திருந்த ஏழு பசுக்கள் தான் ஏழு ஆண்டுகளை உணர்த்தும் என்றார். வலுவிழந்து பதராகி தீய்ந்திருந்த எழு கதிர்கள் பஞ்சம் மிஞ்சும் ஏழு ஆண்டுகளை உணர்த்தும் என்றார். இறைவன் சொல்ல தான் பொருள் கூறியதாக யோசேப்பு கூறினார். இனி இந்த எகிப்து எங்கும் ஏழாண்டு வளம் கொழிக்கும். அதற்கு முன் ஏழாண்டு பஞ்சம் தோன்றும். பஞ்சக் காலத்தில் மக்களின் பசியைப் போக்க வேண்டும் என்று யோசேப்பு கூறினார். யோசேப்பு கூறும்போது,

**"அடுத்தடுத்து வரவிருக்கும் ஆண்டுகள் தாம்**
**விதைமுளைத்து வருவதைப் போல் வருமென்றதோன்**
**வேதத்தின் நாயகனார் உறுதி செய்த**
**சிதைப்பரிய உண்மைதனை உணர்த்து தற்கே**
**திரும்பமறு கனவதும் வந்த துண்டே**
**கதையிதுவும் இல்லையென்றே பார்வோன் தானும்**
**கருதற்கு இறைவனுமே சித்தம் கொண்டார்"[16]**

என்றார்.

## நோவாவுடன் கடவுளின் உடன்படிக்கை

உடன்படிக்கை என்றால் சொற்கட்டு அல்லது பிணைத்தல் என்பது பொருள். உடன்படிக்கை செய்வோரின் ஒருவர் உயர்ந்த நிலையில் இருப்பார். இங்கு இறைவன் நோவாவை விட உயர்ந்தவன். அதனால் உடன்படிக்கை நிகழ்கின்றது. இதில் இறைவன் மனித வாழ்க்கையைப் பூமியில் உறுதிப்படுத்துகின்றான். பழி பாவம் தீண்டாமல் தூயோனாக வாழ்பவன் நோவா. இறைவழிபாடு காலையிலும், மாலையிலும் செய்பவன். மெய்நெறியாளன். அதனால் அவன் இறைவனோடு பேசுவதற்கு தகுதியாகிறான். மண்ணுலகு பாவத்தால் நிறைவதால் படைத்தவன் வெறுக்கின்றான். வன்முறை தீய வழி ஆகியவற்றைக் கண்ட இறைவன் வெள்ளத்தைப் பெருக்கி மண்ணுலகை அழிக்க விரும்புகிறான். அப்போது நோவா அழியாதிருக்க வேண்டுகிறான். கடவுளோ நோவாவும் அவன் குடும்பத்தாரும் பிழைத்திருக்க வழி கூறுகிறார். பேழை ஒன்றைச் செய்திடப் பணிக்க நோவாவும் செய்து முடிக்கிறார். விலங்குகளோடு விரிநிலம் ஊர்வன பலவும் வகைக்கு இரண்டு இரண்டென உயிருடன் நோவாவிடம் வரச் செய்தார். அதன்படி உயிர்கள் அனைத்திலும் நல்லவை ஆணும் பெண்ணுமாய் பேழையில் ஏறின. ஏழு நாட்களில் நானும், முன்பு உரைத்தப்படி நாற்பது பகலும் நாற்பது இரவும் கன மழை பெய்திடச் செய்தார். உயிர்களை அழிப்பதாக அறிவித்தார். பெருமழை பெய்தது உலகே அழிந்தது.

**"ஆக்குவோன் வெள்ளப் பெருக்கினில் அழிந்தன**
**கடவுள் ஆணையில் கதித்தெழு பேழையுள்**
**இடங் கொண்டிருந்த உயிர்கள் யாவும்**
**நோவா வுடனே நொடிப்பின் றிருந்தன"[17]**

**கடவுளின் உடன்படிக்கை**

"உடன்படிக்கை என்ற சொல் "பெரித்" என்ற எபிரேய சொல்லிலிருந்து வந்தது. பழைய ஏற்பாட்டில் 280 முறை இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பயன்பட்ட "ஆங்கிலச் சொல் covenent முதன் முதலாக இச்சொல் ஆதி 6:18-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது"[18] "உன்னோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று நோவாவோடு கடவுள் சொல்லுகிறார்"[19] எனவே முதன் முதலாக கடவுள் மனிதனோடு உடன்படிக்கை பண்ணுகிறார். "இந்த உடன்படிக்கை தான் உலகமே அழிந்தாலும் நோவாவின் குடும்பம் பாதுகாப்பாக இருக்க வழி செய்தது. எனவே

உடன்படிக்கை முதலாவது கடவுளின் பாது காப்பைத் தருகிறது"[20]

## முதல் பெருந் தந்தை ஆபிரகாம்

சேமின் வம்ச வழி வந்தார் தேராகு. ஆபிரகாம், நாகோர், ஆரோன் ஆகிய மூவரும் தேராகு பேர் சொல்பவர். அவருள் ஆரான் மரித்திட்டான். அவரின் தந்தை லோத்தை ஈன்றார். மூத்த ஆபிரகாம் சாராளை மணந்திட்டான். நாகோர் மில்க்காதனை மணந்தார். தேராகு ஊரைவிட்டு தம்மகன் ஆபிரகாமுடன் மருமகள் சாராளுடன், பேரன் லோத்து உடன் கானான் செல்லும் வழியில் ஆரான் என்னும் இடத்தில் இறைவனடி சேர்ந்தார். கடவுள் ஆபிரகாமிடம் கூறியவை நானோ உனக்கு ஈயும் சீரார் நாட்டை

**"சேராய் நானோ உனக்கயும் சீரார் நாட்டை நனி நாடி**
**ஊரார் உறவோர் தம்மைவிட்டு உவந்தே நீயும் புறப்படுவாய்"[21]**
**"உனக்கே ஆசி நானருகி ஓங்கிப் பெருகச் செய்திடுவேன்,**
**மனதிற்கினிய நல்லுரைகள் மாறாது னக்கு நவில்வோர்கள்**
**தினமும் மகிழச் செய்திடுவேன், சேர்த்துத் தருவேன் பேறுபலன்**
**உனக்குச் சாபம் இடுவோரை உடவே சபிப்பேன் காண்பாய் நீ"22**
**"உன்சார் மக்கள் இனம் யாவும் உயர்வாம் ஆசி பெற ஒண்மை**
**என்றார் தேவன் தேர்ந்தாரை ஏற்றார் அவரும் பணிந்தேத்தி**
**கன்றாய்த் தந்தை கடவுள் தன் காலடி நிழலில் நின்றுரைத்தார்**
**வென்றாய் என்னை உனக்காணாய் வேண்டாம் மூவறும் வேண்டேன் நான்"[23]**

கடவுள் பேசியதைக் கேட்டப்பின் ஆபிரகாம்கானார்நோக்கிப்புறப்பட்டான். உடன் சாராளும் சென்றாள். ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி இப்பெரு நாட்டில் ஆண்டு முழுவதும் உன் சந்ததியாருக்கு அன்போடு கூடி நன்கொடை வழங்குவேன் என்றார். ஆணடவருக்கு ஆபிரகாம் நன்றி கூறினார். தமக்கு மட்டுமல்லாமல் தன் வம்சத்தாருக்கும் பாதுகாப்பு தருகிறார் என்றால் இதற்கு இணையானது ஏதும் கிடையாது என இறைவனைப் பாராட்டினார். கானானை விட்டு அடுத்து சாராளோடு எகிப்துக்குப்போனார்.தன்மனைவிஅழகாக இருப்பதால் மற்றவர்களால் அவளுக்குக் கெடுதல் ஏற்படும் என்று கருதி தன் உடன் பிறந்தவள் சாராள் எனப் பொய் கூறினார். அதனால் எகிப்து மன்னன் சாராள் அழகில் மயங்கி சாராளைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள விரும்பினாள். ஆபிரகாமுக்குப் பொருள் கொடுத்தாள். அதன் மூலம் அவளைச் சொந்தமாக்க துடித்தான். இறைவன் தான் வாக்கு கொடுத்தவாறு ஆபிரகாம் குடும்பத்தைக் காப்பாற்ற முயன்று சாராளைக் கணவனிடம் சேர்த்தார். மீண்டும் கானானை அடைந்தார் ஆபிரகாம். அங்கு ஆபிரகாமும் லோத்தும் பிரிந்தார்கள். லோத்து சோதோம் அருகில் போய் தங்கினார். ஆபிரகாமோடு இறைவன் பேசினார். வம்சத்தாரை காப்பாற்றி வாழ்த்துக் கூறினார். சோதோமைவிட்டு லோத்தை மீட்கிறார்.

## முடிவுரை

காப்பியக் கதை தொடக்கம் முதல் முடிவு வரை ஒரே பகுதியாக அமையாமல் பகுதிகள் பலவற்றின் தொகுப்பாக அமையும். 33 படலங்களாக ஆக்கப் பெற்றது. ஆதியாகம காவியம். ஆறு பாகங்களாகப் பகுக்கப்பட்டது. பெரும் பகுப்பு பாகம் என்றால் சிறுபகுப்பு படலம் என்பதாகும்.

நூன்முகமாக பாயிரம், தற்பாயிரம் என இரண்டு பகுதிகள் உள்ளன. பாட்டுடைத் தலைவன் இறைவன் என்பதால் அவனது அருங்குணங்கள் முப்பெரும் நிலை கூறி மூவரும் (பிதா, சுதன், பரிசுத்த ஆவி) ஒரு கடவுளே என்பது விளக்கப் பெறுவதைக் காணமுடிகிறது. காப்பிய நோக்கம், நூல் வந்த வழி, காப்பிய நூலாசிரியன் பற்றிய

குறிப்பு ஆகியன சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன.

கதையே காப்பியத்தின் உயிர், காப்பியம் மூலம் விவிலியம் விவிலிய மாந்தர்களை அவர் தம் வம்சத்தொடர்பு, படிப்போர் படித்தறியும் எளிய மரபுக் கதையால் விளக்கப் பெறுகின்றன.

ஒப்பற்ற தலைவன் என்றும் பிற பாத்திரங்களின் பண்புகளில் நல்லதும் கெட்டதும் இணைக்கப்பெற்றுள்ளன. சாதாரண மக்கள் பாத்திரங்கள் என்பதால் கோபம், பொறாமை, பழிக்குப்பழி வாங்கல் போன்ற குணமுடையோரும் உள்ளார். குணமும் குற்றமும் உடையோராவார்.

காப்பியம் எழுச்சியுடன் விறுவிறுப்பாய்ச் செல்ல கதை அமைப்பு அவசியம் துணைக் கதைகள் பல பின்னப்பட்டு மூலக் கதையின் துணைக்கூறுகளாய் நின்று காப்பியக் கட்டுக் கோப்பிற்கு உதவுகின்றன.

இனிய நடையில் காப்பியம் படைக்கப்பட்டுள்ளது. உவமை, நயம், ஓசைநயம், அணிநயம், நடைநயம் வாய்ந்த சொற்களால் கவி நயத்துடன் படைத்துள்ளார்.

பிறப்பு இறப்புப் பற்றிய மரபுகள் விளக்கப்பட்டுள்ளன. இம்மரபுகளின் வழி மனிதனின் வாழ்வியலை வெளிப்படுத்தியுள்ளார். இம்மரபுகள் மக்கள் வழக்கில் பயன்படுவதைக் காண முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. ஜி.ஜான் சாமுவேல்,கிறித்தவ தமிழ் இலக்கியம்,சில பார்வைகள் ப:24
2. ஆய்வுக்கோவை(2001)இ.ப.த.மன்றம், ப, 1508
3. மேலது, ப.1509
4. ச.வே. சுப்பிரமணியன் - காப்பிய புனைதிறன், ப.5
5. மேலது, ப,20
6. தண்டியலங்காரம் நூற்பா
7. பரிசுத்த வேதாகமம் ஆதி: 1:5
8. மேலது, 1:84
9. மேலது, 1:12,13
10. மேலது, 1:18,19
11. மேலது, 1:22,23
12. மேலது, 1:31
13. தொல்காப்பியம், களவியல் நூ, 25
14. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், நூ, 22
15. சிலப்பதிகாரம் 9:45-54 20:1-14
16. ஆதியாகம காவியம் பா.20, ப.316
17. ஆதியாகம காவியம் பா.103, ப.52
18. நற்போதகம்,மாத இதழ் பெப்ரவரி 2010 ப.17
19. மேலது
20. மேலது
21. ஆதியாகமகாவியம் ப .126 பா.4
22. மேலது, பா.5, ப.126
23. மேலது பா.6 ,ப.126

## பயன்கொண்ட நூல்கள்

1. ச. சாமிமுத்து கிளாரா பதிப்பகம், 17/15பி காவிரி நகர், திருச்சிராப்பள்ளி-620018, முதற்பதிப்பு-டிசம்பர் 2008.
2. சிலப்பதிகாரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2004.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, சென்னை, பதிப்பு-1998.
4. பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம், 206, மகாத்மாகாந்தி சாலை, பெங்களூர்.
5. ஜி. ஜான் சாமுவேல், கிறிஸ்தவ தமிழ் இலக்கியம் சில பார்வைகள், ஆசிய கல்வி நிறுவனம், சென்னை பதிப்பு, 1992.